வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

மூ.மு.எண் 2540/அ3/2022 நாள் 07.08.2023

பொருள் பள்ளிக்கல்வி – அரசு / நகராட்சி / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2022 நிலவரப்படி மாணவர்களின் எண்ணிகையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்தமை – ஆசிரியரின்றி உபரி காலிபணியிடங்களை இயக்குநரின் பொது தொகுப்பிற்கு சரண் செய்தமை – ஏற்பளித்து ஆணை வழங்குதல் சார்பு.

பார்வை சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.கஎண் 054550/சி3/இ1/2022 நாள் 07.08.2023.

பார்வையில் காணும் செயல்முறைகள் ஆணையின் படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / நகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2022 நிலவரப்படி பட்டதாரி ஆசிரியர்களுக்கான பணியாளர் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டதில் பாடவாரியாக ஆசிரியரின்றி உபரி என கண்டறியப்பட்ட பணியிடங்களை ( Surplus Post With Out Person ) இயக்குநரின் பொது தொகுப்பிற்கு ஒப்படைக்க சார்ந்த பள்ளி தலைமைஆசிரியருக்கு தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் ஆசிரியரின்றி உபரி காலிபணியிடங்களை ( Surplus Post With Out Person ) இணைப்பில் காணும் தலைமைஆசிரியர் மூலமாக பெறப்பட்ட விவரங்களின் இயக்குநரின் பொது தொகுப்பிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதால் அதனை ஏற்பளித்து ஆணையிடப்படுகிறது. மேலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள (ஆசிரியரின்றி உபரி பணியிடங்களை ) வரும் காலங்களில் காலிபணியிங்களாகவோ , அனுமதிக்கப்பட்ட பணியிடங்களாகவோ கருதக்கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. மேலும் இது குறித்து சார்ந்த பள்ளியில் பராமரிக்கப்படும் அளவு கோல் பதிவேட்டில் ( Scale Register ) உரிய பதிவுகள் நீக்கம் செய்யுமாறு மீள தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் மேற்காண் விவரங்களை 2024-2025 ஆம் கல்வியாண்டின் எண்வகைப் பட்டியல் (Number Statement) சார்பான விவரங்கள் கோரப்படும் போது அளவுகோல் பதிவேட்டில் திருத்தம் செய்து அதன் நகல் மற்றும் இச்செயல்முறை நகல் உடன் சமர்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு**

ஆசிரியரின்றி உபரி பணியடங்கள் சரண் செய்யப்பட்டவை (பள்ளி வாரியாக)

(ஒம் செ.மணிமொழி)

முதன்மைக் கல்வி அலுவலர்

வேலூர்

**பெறுநர்**

தலைமைஆசிரியர்கள்

அரசு / நகரவை உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள்,

வேலூர் மாவட்டம்.